**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 27 August 2021

# தக்கவைத்துக்கொள்ள தொடர்ந்து உருமாறும் கொவிட்-19 கிருமி

கொவிட்-19 கிருமியின் வடிவத்தையும் அமைப்பையும் பற்றி உள்ளூர் விஞ்ஞானிகள் முக்கியமான தகவலைக் கண்டுபிடித்துள்ளனர். இது கொவிட்-19 தொற்றுக்கு எதிராக மேலும் பயனுள்ள தடுப்பு மருந்தை உருவாக்க உதவும். வளர்வதற்கும் தாக்குப்பிடிப்பதற்கும் ‘ஆர்என்ஏ’ அமிலம் தன்னைத்தானே பல வடிவங்களில் உருமாற்றிக் கொள்ளும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அந்தக் கிருமி. மனித இரத்த அணுக்களைப் பயன்படுத்தி தன்னைத் தாக்குப்பிடித்து கொள்ளும் என்றும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியும் ‘ஜீனோம் இன்ஸ்டிடியூட் ஆஃப் சிங்கப்பூர்’ மற்றும் ‘பயோ இன்ஃஃபர்மேட்டிக்ஸ்’ கழகத்தைச் சார்ந்த குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். அந்த இரத்த அணுக்கள் புரத உற்பத்தி கிருமிக்கு செய்து உதவுகின்றன. இந்த முக்கிய புரதங்கள் கிருமி மற்ற அணுக்களில் தொற்றிக்கொள்ள உதவுகின்றன. கிருமிக்கும் மனித மரபணுவிற்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றி தற்போது அதிக தகவல்கள் இல்லை. தற்போது உலவிக்கொண்டிருக்கும் பலவகை கொவிட்-19 கிருமிகள் எவ்வாறு தங்களது வடிவங்களை மாற்றி அமைத்துக்கொண்டு பரவுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள இந்த ஆய்வு உதவும் என்று டாக்டர் டான் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.